**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous — CC.No. 107/2017
Preliminary register
Sessions

Deposition Of Witness for — Prosecution PW 6
Defense
Court

Name — டாக்டர். நசீர்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of October 2022.

நான் தற்போது கூடன்குளத்தில் உள்ள இஎஸ்ஐ மருத்துவமனையில் உதவி மருத்துவ அலுவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான்குநேரி அரசு மருத்துவமனையில் பணியாற்றிய போது கடந்த 14.10.2016 ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் சுமார் 39 வயது மதிக்கதக்க பெண் திருமதி.மரியசெல்வம் க/பெ. ஏசுதாசன் 4/3 காலணிதெரு, சிலயம் என்பவரை அவரது கணவர் அழைத்து வந்தார் அவரை மூன்று அடையாளம் தெரிந்த ஆண் நபர்கள் மரகட்டையால் தன்னை தாக்கியதாக கூறி சிகிச்சைக்காக வந்தார். அவரை மருத்துவ பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் சுயநினைவுடனும், நல்ல ஞாபக சக்தியுடனும் காணப்பட்டார்.

அவரது உடம்பில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1) இடது முழங்கைக்கு மேல் உள்ள கைபகுதியில் 4X.5 செமீ அளவு கொண்ட சிராய்ப்பு காயம். 2) இடது கால் முட்டிற்கு கீழ் உள்ள கால்பகுதியில் 3X.5 செமீ அளவு கொண்ட சிராய்ப்பு காயம். 3) இடது முழங்கை முட்டியின் கீழ் உள்ள கைபகுதியில் சிறிய வீக்கம் காணப்பட்டது. இவை தவிர்த்து வெளிபடையான வேறு காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவர் வெளிநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டு விபத்துபதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதராண காயங்கள் என்று சான்று வழங்கினேன். காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயசான்றிதழ் நான் அளித்தது தான் அந்த காயசான்றிதழ் **<u>அ.சா.ஆ. 3</u>** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்கூறிய காயங்கள் மோட்டார் வாகனத்தில் இருந்து கீழே விழும் போதும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. முள்செடி பட்டு மேற்படி காயங்கள் ஏற்பட

வாய்ப்பில்லை என்றால் முள்பட்டு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை ஆனால் முட்செடி பட்டு சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மறு விசாரணை இல்லை**